1979 பிப்ரவரி 17]

சென்னையில் காமராஜர் நினைவு இல்லம்.

*வினா எண். 68—

திரு. என். கிட்டப்பா,
திரு. மெ. ஆண்டி அம்பலம்,
திரு. துரை முத்துசாமி,
திரு. நா. சுந்தரராஜ்,
திரு. சோ. பாலகிருஷ்ணன்,
திரு. சொ. ந. பழனிச்சாமி,
திரு. ஓ. சுப்பிரமணியன்,
திரு. ஓ. சோ. வேலுச்சாமி:

மாண்புமிகு செய்தி அறநிலையத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சென்னையில் உள்ள காமராசர் இல்லத்தை அவரது நினைவுச்சின்னமாக்க இந்த அரசு திட்டமிட்டுள்ளதா?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: சென்னையில் அமரர் காமராஜ் அவர்கள் வாழ்ந்த இல்லம் காமராஜ் நினைவு இல்லமாக 15–7–78 அன்று திறந்து வைக்கப்பட்டுள்ளது.

திரு. என். கிட்டப்பா: பெருந்தலைவர் காமராஜ் அவர்களின் இல்லம் நினைவுச்சின்னமாகத் திறந்து வைக்கப்பட்டிருக்கிறது. அதேபோல் மராட்டிய மண்டிலத்தில் உத்தமர் காந்தியார் அவர்கள் வாழ்ந்த இடம் நினைவுச்சின்னமாக திறந்து வைக்கப்பட்டிருப்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் பலர் பார்த்திருப்பார்கள். அதில் காந்தியார் அவர்களது வாழ்க்கையில் நடைபெற்ற போராட்டங்கள், ஆங்கில ஏகாதிபத்தியத்தை எதிர்த்து நடத்திய போராட்டங்கள், அறப்போராட்டங்கள் அத்தனையும் சிறந்த முறையில் சித்தரிக்கப்பட்டிருக்கின்றன. இரண்டு மூன்று நாட்களுக்கு முன்னால் பெருந்தலைவர் காமராஜ் நினைவுச் சின்னத்தை நான் பார்த்தபோது–நன்றாக இல்லை என்று சொல்லவில்லை—அந்த அளவிற்கு சிறப்பாக அமையவில்லை. ஆகவே மாண்புமிகு அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் அதில் தனிக் கவனம் செலுத்தி பெருந்தலைவர் காமராஜ் அவர்களின் நினைவாலயத்தை மேலும் சிறப்பாக உருவாக்குவதற்கு, இன்னும் எவ்வளவோ பேர்கள் அங்கு சென்று காமராஜ் அவர்களின் வாழ்க்கை வரலாற்றை நேரடியாகத் தெரிந்துகொள்வதுபோல் அமைத்துக் கொடுக்க வழிவகை காண முன்வருவார்களா? இன்னொன்று, தனிப்பட்ட முறையில் வருத்தத்தோடு நான் சொல்லிக்கொள்ள விரும்புவது . . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கேள்வியைச் சுருக்கமாகக் கேளுங்கள்.

[1979 பிப்ரவரி 17

திரு. என். கிட்டப்பா : பெருந்தலைவர் காமராஜ் அவர்களோடு பழகிய பல முக்கியத் தலைவர்களின் படங்கள் குறிப்பாக நமது முதல் அமைச்சர் புரட்சித் தலைவர் அவர்களைப் போன்றவர்கள், ராஜாஜி போன்றவர்கள், தந்தை பெரியார் போன்றவர்கள் படங்கள் எல்லாம் அங்கே மாட்டப் பட்டிருக்கின்றன. என்ன காரணத்தாலோ எங்கள் கட்சித் தலைவர் டாக்டர் கலைஞர் அவர்கள் படம் ஏதோ ஒரு மூலையில் மாட்டப்பட்டிருக்கிறது. மூலையில் மாட்டப்பட்டிருந்தாலும், அதற்கு ஒரு தகுதியான இடத்தைத் தரவேண்டுமென்று திராவிட முன்னேற்றக்கழகத் தொண்டன் என்ற முறையில் நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : தலைவர் அவர்களே, மாண்புமிகு திரு. கிட்டப்பா அவர்கள் காந்தியார் அவர்களுக்கு நினைவுச் சின்னத்தை சிறப்பாக வைத்திருப்பதுபோல் இங்கும் வைக்கப்பட வேண்டும் என்று ஏன் பீடிகை போட்டார்கள் என்பதை கேள்வியின் இரண்டாவது பகுதியிலிருந்து தெரிந்து கொள்ள முடிந்தது. நன்றி. இந்த அரசு காமராஜ் அவர்களது நினைவு இல்லத்தை சிறப்பாக வைத்துக் கொள்ளவேண்டும் என்கின்ற முயற்சியில் ஈடுபட்டுக்கொண்டிருக்கிறது. அதற்கான படங்கள், நிகழ்ச்சிகள் சம்பந்தப்பட்ட செய்திகள் போன்ற பல்வேறு சாதனைகளைத் திரட்டிக்கொண்டிருக்கிறது. அதற்கான ஒரு பெரிய திட்டத்தை உருவாக்க வேண்டும் என்ற முயற்சியை இந்த அரசு எடுத்துக் கொண்டிருக்கிறது. பின்னால் அவர்கள் கேட்டதைப் போல், முன்னாள் முதலமைச்சர் அவர்களது படத்தை முக்கியமான நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டவர்களின் படங்கள் வைக்கின்ற இடத்தில்தான் வைக்கப்பட்டிருக்கிறது. அதைத் தொடர்ந்து இன்னும் முக்கியமான இடத்தில் அவர்களது படத்தை வைக்கவேண்டும் என்று கேட்கும்போது, மற்றவர்களுக் கெல்லாம் எந்த வாய்ப்பு அளிக்கப்பட்டிருக்கிறதோ, அதே போன்ற கருத்தில் இதையும் அரசு கவனத்தில் எடுத்துக்கொள்ளும் என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

திரு. மெ. ஆண்டி அம்பலம் : தலைவர் அவர்களே, பெருந் தலைவர் காமராஜ் அவர்களுடைய இல்லம் நினைவுச் சின்னமாக ஆக்கப்படுமா என்ற கேள்வி அனுப்பி இரண்டு வருடங்களுக்கு மேலாகிறது. இப்போதுதான் பதில் கொடுக்கப்பட்டிருக்கிறது. பம்பாயில் காந்தியடிகளுக்கு அழகாக நல்லபடியான நினைவுச்சின்னத்தை எழுப்பியிருக்கிறார்கள். அதைப்போன்று பெருந்தலைவர் காமராஜ் அவர்களுடைய நினைவு இல்லமும் பாதுகாக்கப்படுமா? ஏதோ எடுத்து நடத்துகிறோம் என்ற அளவில்தான் இப்போது வைக்கப்பட்டிருக்கிறது என்பதை சொல்லிக் கொள்கிறேன்.

1979 பிப்ரவரி 17]

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: அந்த இல்லம் இந்த அரசால் கட்டப்பட்ட கட்டடம் அல்ல. பெரும் தலைவர் காமராஜ் அவர்கள் வாழ்ந்துவந்த இடத்தை நினைவுச்சின்னமாக மாற்றியிருக்கிறோம். அதிலே நாம் மாற்றம் செய்யக் கூடாது. அப்படி மாற்றம் செய்வதும் சரியல்ல, அது பொருத்தமும் அல்ல. ஆனால் அதன் உள்ளே, மக்களுக்குத் தெரிவிக்கவேண்டிய செய்திகளை, நிகழ்ச்சிகளைத் தெரிவிப்பதற்கு நினைவுச்சின்னங்களை ஏற்படுத்துவதற்கு அரசு முயற்சி எடுத்துக்கொண்டு வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. சொ. ந. பழனிச்சாமி: மறைந்த நம்முடைய அன்புத் தலைவர் காமராஜ் அவர்களுடைய நினைவுச்சின்னத்தை தமிழக அரசு எடுத்து நடத்துவது பற்றி மிகவும் மகிழ்ச்சி அடைகிறேன். அதோடு, அவருடைய வாழ்க்கையைச் சித்தரிக்கும் திரைப்படம் ஏதாவது அரசிடம் உள்ளதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: அரசிடம் அவருடைய வாழ்க்கையைச் சித்தரிக்கும் திரைப்படம் எதுவும் இப்போது இல்லை. அதை சில நண்பர்கள் எடுத்து வைத்திருக்கிறார்கள் என்ற தகவலைத் தந்திருக்கிறார்கள். அவர்களுடன் தொடர்பு கொண்டிருக்கிறோம். தேவைப்படும்போது, அவர்களிடமிருந்து அது பெறப்பட்டு, பாதுகாப்பாக வைத்து மக்களுக்குத் தேவைப் படும் நேரத்தில் திரையிடுவதற்கு இந்த அரசு முயற்சி செய்யும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. என். கிட்டப்பா: தலைவர் அவர்களே, பெருந்தலைவர் காமராஜ் அவர்களது நினைவுச்சின்னத்தை அமைத்திருப்பது போலவே, சென்னை நகரத்தில் அண்ணா அவர்கள் வாழ்ந்த இடத்தை, அவர்களது வாரிசு என்று கூறப்படுபவர்கள் அதை நினைவாலயமாக ஆக்குவதற்கு கொடுப்பதற்கு மறுத்து வருவதாகச் சொல்லப்படுகிறது. அது உண்மையானால் அரசாங்கமே அதை எடுத்து தேசியமயமாக்கி, அந்த இடத்தை பேரறிஞர் அண்ணா அவர்களது நினைவாலயமாக உருவாக்கு வதற்கான முயற்சியை மேற்கொள்ளுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: தலைவர் அவர்களே, பேரறிஞர் அண்ணா அவர்கள் பிறந்து நீண்ட காலம் வாழ்ந்த காஞ்சிபுரம் இல்லம் அரசுடைமையாக்கப்பட்டு, நினைவுச் சின்னமாக ஆக்குவதற்கான முயற்சியில் அரசு ஈடுபட்டிருக்கிறது. பிற்காலத்தில் சென்னையில் அண்ணா வாழ்ந்திருக்கிறார்கள். அப்படிப்பட்ட இல்லத்தை தேசியமயமாக்கி, நினைவுச்சின்னமாக ஆக்கவேண்டுமா என்பதைப்பற்றி அரசு இன்னும் பரிசீலிக்க

வில்லை. அதனால் அந்த இல்லத்தைக் கொடுப்பதற்கு மறுத்தார்கள் என்கின்ற தகவல் சரியானது அல்ல என்பதையும் இந்த மன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

[முற்பகல் 9·50]

திரு. ர. ஜெயமணி: பெருந்தலைவர் காமராஜ் அவர்களுடைய நினைவாலயத்தில் இரவிலே விளக்கு எரிவதில்லை. எனவே, இரவிலே அங்கே ஒரு விளக்கு எரிவதற்கு ஏற்பாடு செய்யப்படுமா? நான் இதைப்பற்றி சர்க்காருக்கு எழுதியிருக்கிறேன். கவனிக்கப்படும் என்று சொல்லப்படுகிறதே தவிர, அது ஒரு காடு போல் கிடக்கிறது. எனவே, ஒரு விளக்கு அங்கே எரிவதற்கு ஏற்பாடு செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: தலைவர் அவர்களே, பெருந்தலைவர் காமராஜர் அவர்களை அடக்கம் செய்த இடத்திலே நினைவாலயம் அமைக்கப்பட்டிருக்கிறது. இந்த நினைவாலயத்திலே விளக்கு மாத்திரம் எரிய வேண்டுமென்ற முடிவில் இந்த அரசு இல்லை. அது இன்னும் சிறப்பாக அமைக்கப்பட வேண்டுமென்ற முயற்சியில் அரசு தகுந்த வரைவுகளைக் கேட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 8 கேள்விகளுக்கு 50 நிமிடங்கள் ஆகிவிட்டன. இன்னும் 12 கேள்விகள் இருக்கின்றன. கேள்விகளுக்கு எவ்வளவு நேரம் தரமுடியும் என்பதுதான் பிரச்னை. கேள்வி எண். 69.

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

தொழிற்பயிற்சி நிலையங்களிலிருந்து வெளிவந்துள்ள பயிற்சியாளர்கள்.

*வினா எண். 69—திரு. செஞ்சி ந. இராமச்சந்திரன்: மாண்புமிகு கல்வித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரசினர் தொழிற்பயிற்சி நிலையங்களில் 1975–76, 1976–77 ஆண்டுகளில் வெளிவந்துள்ள மொத்த பயிற்சியாளர்கள் எத்தனை பேர்?

(ஆ) அத்தனை பேருக்கும் வேலைவாய்ப்புக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதா?